# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **204/2015**

ஆணை எண். **192/2016**

நாள் : **03/12/2016**

09.12.2015 நாளிட்ட
டைம்ஸ் ஆப் இண்டியா
ஆங்கில நாளிதழ் செய்தி, – **முறையீடாகப் பதிவு செய்யப்பட்டது**

மண்டல அலுவலர்,
மண்டலம் – 8,
சென்னை மாநகராட்சி,
சென்னை – 30. – **எதிர் மனுதாரர்**

சென்னை பதிப்பு, டைம்ஸ் ஆப் இண்டியா ஆங்கில நாளிதழில் "Refused Death Certificate, family waits for a day to cremate man" என்று 12.09.2015 அன்று வெளியிடப்பட்ட செய்தியினை, 204/2015 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யப்பட்டது. மேற்படி செய்தி குறித்த மண்டல அலுவலரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

<u>ஆணை</u>

சென்னை பதிப்பு, டைம்ஸ் ஆப் இண்டியா ஆங்கில நாளிதழில் "Refused Death Certificate, family waits for a day to cremate man" என்று 12.09.2015 அன்று வெளியிடப்பட்ட செய்தியில், பாடி புதூர் நகரைச் சேர்ந்த திரு V.தங்கவேலு என்பவர் காலமான பின்பு அவரின் உடலை எரியூட்டு செய்வதற்காக வில்லிவாக்கம் இடுகாட்டிற்கு எடுத்துச்சென்றதாகவும், அன்னாரது மகனிடம் ரூபாய்.6,000/– கையூட்டு பெற்றுக்கொண்டபின்பே எரியூட்டு செய்யப்பட்டது என அரசு சாரா நிறுவனத் தொண்டர் ஒருவர் தெரிவித்ததாக செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் PACE அமைப்பைச் சேர்ந்த திரு. G. பாலாஜி என்பவர் இறந்த நபரை எரியூட்டு செய்வதற்கு அவரது குடும்பத்தாருக்கு உதவியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2. இந்நாளிதழின் செய்தி குறித்து, சென்னை மாநகராட்சி, 8–வது மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. வில்லிவாக்கம் இடுகாட்டில் 12.09.2015 அன்று சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கள ஆய்வு செய்ததில், இடுகாட்டில் பணிபுரிந்த பணியாளர்கள் யாரும் பணம் வாங்கவில்லை என்று நேரில் தெரிவித்ததாகவும், இது சம்பந்தமாக அடக்கம் செய்யப்பட்ட திரு. V.தங்கவேலு அவர்களின் உறவினர்களிடமும் விசாரணை மேற்கொண்டதில், யாரும் பணம் வழங்கவில்லை என்று நேரில் தெரிவித்ததாக மண்டல அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். PACE அமைப்பைச் சேர்ந்த திரு. G. பாலாஜி அவர்களிடம், மேற்படி ஆங்கில நாளிதழில் வெளியான செய்தி மற்றும் மண்டல அலுவலர் தெரிவித்துள்ள விளக்கத்தினை உறுதி செய்வதற்காக அவரது முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிடுமாறு மேற்படி ஆங்கில நாளிதழிடம் கோரப்பட்டது. நான்கு மாதங்களுக்கு மேல் கடந்த நிலையிலும், திரு. பாலாஜி குறித்த முகவரி விவரங்களை மேற்படி ஆங்கில நாளிதழ் வழங்கவில்லை. எனவே. சென்னை மாநகராட்சி, 8–வது மண்டல அலுவலரின் அறிக்கையினை ஏற்று, இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. எதிர்காலத்தில் இதுபோன்ற புகார்கள் எழுவதற்கு சிறிதும் இடம் தராமல் தொண்டுள்ளத்துடன் செயல்பட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 8,**
**சென்னை மாநகராட்சி,**
**எண். 368, புல்லா அவின்யு,**
**செனாய் நகர், சென்னை – 30.**

/உண்மை நகல்/

செயலாளருக்காக.